எண் 121.


# திருக்கடவூர் மயானத் திருப்பதிகங்கள்.


சம்பந்தர்


அப்பர்


சுந்தரர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 121.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருக்கடவூர் மயானத் திருப்பதிகங்கள்

இது
திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்
உடு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1946.

பிரதிகள் 500.

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

சிவமயம்

# பதிப்புரை

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்கச்செய்தலும் ஒன்றாம். ஆதலின் அவர்கள் திருவுளப்பபடி திருக்கடவூர் மயானத் திருப்பதிகங்கள் என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீ பிரமபுரீசுவரர் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

## மூவர் வணக்கம்

அடலமணைக் கழுவேற்றும் திருஞான
சம்பந்த ரடிகள் போற்றி
கடலிடைக்கற் றூண்மிதப்ப ஓதுதமிழ்க்
கடலினடிக் கமலம் போற்றி
மடலவிழ்பூங் குழற்பரவை வாசலினம்
இறையிருதாள் வருந்த மீண்டும்
தொடர்வருந்தூ தெனவிடுத்த சுந்தரன்பொற்
றுமரையாந் துணைத்தாள் போற்றி.

# தலச்சிறப்பு

சைவசமயாசாரியர்கள் அருளிய தேவாரப் பதிகங்கள்பெற்ற சிவத்தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கனுள் காவிரிவளம்பெறும் சோழநாட்டில் விளங்குவன 190 ஆகும். அவைகளுள் காவிரியின் வடபால் 63ம் தென்பால் 127ம் அமைந்துள்ளன. திருக்கடவூர் மயானம் என்னும் இத்தலம் தென்பாலுள்ளது. இக்காலத்துத் திருமெய்ஞ்ஞானம் என வழங்குகிறது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்ருகிய - மார்க்கண்டர்க்காகக் காலஸம்ஹாரஞ் செய்தருளிய திருக்கடவூர் என்னும் தலத்திற்குக் கிழக்கில் 1-கல் தொலைவில் இத்தலம் உள்ளது. இறைவர் பிரமபுரீசர். இறைவி அமலக்குயமின்னம்மை. இறைவன் பிரமதேவரை நீருக்கி மீண்டும் அவரை உயிர்ப்பித்துப்படைப்புத் தொழிலைக்கொடுத்தருளியதலம் இது என்று தலப்பெயர்க் காரணம் கூறப்படுகிறது.

இத்தலத்திற்குத் தென்பால் மார்க்கண்டேயதீர்த்தம் உள்ளது. இது கிணறு வடிவம். மார்க்கண்டர் வேண்டுகோட்படி இதன் கண் கங்கை தோன்றியது. இது கடவூர் அமிர்தகடேசுவரருக்கு மட்டும் திருமஞ்சனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. சங்காபிஷேகத்திற்கு எடுக்கப்படுவதும் இத்தீர்த்தமே. ஆண்டுதோறும் பங்குனி சுக்கில பட்ச அசுவனி நக்ஷத்திரத்தில் அமிர்தகடேசுவரர் இதில் தீர்த்தங்கொடுத்தருளுகின்றார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்திசுவாமிகளருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றுமாக மூன்று திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. நாவுக்கரசர் பதிகத்தில் எட்டுத் திருப்பாடல்களே கிடைத்துள்ளன.

க்ஷேத்திரத் திருவெண்பா பாடியருளிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இத்தலத் திற்கும் ஒருபாடல் அருளியுள்ளார்.

உய்யும் மருந்திதனை உண்மின் எனவுற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்கால் — பைய
எழுந்திருமி யான்வேண்டேன் என்னுமுன் நெஞ்சே
செழுந்திரு மயானமே சேர்.

சிவமயம்



# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் — காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வரியமறையார் பிறையார் மலையோர்சிலையா வணக்கி
எரியமதில்க ளெய்தா ரெறியுமுசல முடையார்
கரியமிடறு முடையார் கடவூர்மயான மமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவா ரவரெம்பெருமா னடிகளே. ௧

மங்கைமணந்த மார்பர் மழுவாள்வலனொன் றேந்திக்
கங்கைசடையிற் கரந்தார் கடவூர்மயான மமர்ந்தார்
செங்கண்வெள்ளே றேறிச் செல்வஞ்செய்யா வருவார்
அங்கையேறிய மறியா ரவரெம்பெருமா னடிகளே. ௨

ஈடலிடப மிசைய வேறிமழுவொன் றேந்திக்
காடதிடமா வுடையார் கடவூர்மயான மமர்ந்தார்
பாடலிசைகொள் கருவி படுதம்பலவும் பயில்வார்
ஆடலரவ முடையா ரவரெம்பெருமா னடிகளே. ௩

இறைநின் றிலங்கு வளையா ளிளையாளொருபா லுடையார்
மறைநின் றிலங்கு மொழியார் மலையார்மனத்தின் மிசையார்
கரைநின் றிலங்கு பொழில்சூழ் கடவூர்மயான மமர்ந்தார் ௭
பிறைநின் றிலங்கு சடையா ரவரெம்பெருமா னடிகளே. ௪

வெள்ளையெருத்தின் மிசையார் விரிதோடொருகா திலங்கத்
துள்ளுமிளமான் மறியார் சுடர்பொற்சடைக டுளங்கக்
கள்ளநகு வெண் டலையார் கடவூர்மயான மமர்ந்தார்
பிள்ளைமதிய முடையா ரவரெம்பெருமா னடிகளே. ௫

பொன்றாதுதிரு மணங்கொள் புனைபூங்கொன்றை புனைந்தார்
ஒன்றாவெள்ளே றுயர்த்த துடையா ரதுவே யூர்வார்
கன்றாவினஞ்சூழ் புறவிற் கடவூர்மயான மமர்ந்தார்
பின்றாழ்சடையா ரொருவ ரவரெம்பெருமா னடிகளே. ௬

பாசமான களைவார் பரிவார்க்கமுத மனையார்
ஆசைதீரக் கொடுப்பா ரலங்கல்விடைமேல் வருவார்
காசைமலர்போல் மிடற்றார் கடவூர்மயான மமர்ந்தார்
பேசவருவா ரொருவ ரவரெம்பெருமா னடிகளே. ௭

செற்றவரக்க னலறத் திகழ்சேவடிமெல் விரலாற்
கற்குன்றடர்த்த பெருமான் கடவூர்மயான மமர்ந்தார்
மற்றொன் றிணையில் வலிய மாசில்வெள்ளி மலைபோல்
பெற்றொன்றேறி வருவா ரவரெம்பெருமா னடிகளே. ௮

வருமாகரியி னுரியார் வளர்புன்சடையார் விடையார்
கருமா னுரிதோ லுடையார் கடவூர்மயான மமர்ந்தார்
திருமாலொடுநான் முகனுந் தேர்ந்துங்காண முன்னொண்ணாப்
பெருமானெனவும் வருவா ரவரெம்பெருமா னடிகளே. ௯

தூயவிடைமேல் வருவார் துன்னாருடைய மதில்கள்
காயவேவச் செற்றார் கடவூர்மயான மமர்ந்தார்
தீயகருமஞ் சொல்லுஞ் சிறுபுன்றேர ரமணர்
பேய்பேயென்ன வருவா ரவரெம்பெருமா னடிகளே. ௧௦

மரவம்பொழில்சூழ் கடவூர் மன்னுமயான மமர்ந்த
அரவமசைத்த பெருமா னகலமறிய லாகப்
பரவுமுறையே பயிலும் பந்தன்செஞ்சொன் மாலை
இரவும்பகலும் பரவி நினைவார்வினைக ளிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.



சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

குழைகொள் காதினர் கோவண வாடையர்
உழையர் தாங்கட ஊரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமா னடிகளே. ௧

உன்னி வானவ ரோதிய சிந்தையில்
கன்ன றேன்கட ஊரின்ம யானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னார் பெருமா னடிகளே. ௨

சூல மேந்துவர் தோ லுடை யாடையர்
ஆல முண்டமு தேமிகத் தேக்குவர்
கால காலர் கடவூர் மயானத்தர்
மாலை மார்பர் பெருமா னடிகளே. ௮

இறைவ னிமை யோர்தொழு பைங்கழல்
மறவ னர்கட வூரின் மயானத்தார்
அறவ னரடி யாரடி யார்தங்கள்
பிறவி தீர்ப்பர் பெருமா னடிகளே. ௯

கத்து காளி கதந்தணி வித்தவர்
மத்தர் தாங்கட வூரின் மயானத்தார்
ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொரு
பித்தர் காணும் பெருமா னடிகளே. ௰

எரிகொண் மேனி யிளம்பிறை வைத்தவர்
கரியர் தாங்கட வூரின் மயானத்தார்
அரிய ரண்டத்து ளோரயன் மாலுக்கும்
பெரியர் காணும் பெருமா னடிகளே. ௬

அணங்கு பாகத்த ராரண நான்மறை
கணங்கள் சேர்கட வூரின் மயானத்தார்
வணங்கு வாரிடர் தீர்ப்பார் மயக்குறும்
பிணங்கொள் காடர் பெருமா னடிகளே. ௭

அரவு கையின ராதி புராணனூர்
மரவு சேர்கட வூரின் மயானத்தார்
பரவு வாரிடர் தீர்ப்பார் பணிகொள்வர்
பிரமன் மாற்கும் பெருமா னடிகளே. ௮

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்



# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

## பண் – பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரம னிந்திர ற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடலூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. க

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல்
    மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர்
    கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன் றெரிசெய்த
    விறைவ ருமையோ ரொருபாகம்
பெண்ணாண் ஆவர் மயானத்துப்
    பெரிய பெருமா னடிகளே. உ

காயும் புலியின் அதளுடையர்
    கண்ட ரெண்டோட் கடவூரர்
தாயுந் தந்தை பல்லுயிர்க்குந்
    தாமே யாய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப்
    பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழு மயானத்துப்
    பெரிய பெருமா னடிகளே. ௩

நறைசேர் மலரைங் கணையானை
நயனத் தீயாற் பொடிசெய்த
இறையா ராவ ரெல்லார்க்கு
மில்லை யென்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு
பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. ௪

கொத்தார் கொன்றை மதிசூடிக்
கோள்நா கங்கள் பூணாக
மத்த யானை யுரிபோர்த்து
மருப்பு மாமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள்
பாடி யாடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. ௫

துணிவார் கீளுங் கோவணமுந்
துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமே விட்ட பாசுபதர்
பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றுந்
தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. ௬

காரார் கடலின் நஞ்சுண்ட
கண்டர் கடவூ ருறைவாணர்
தேரார் அரக்கன் போய்வீழ்ந்து
சிதைய விரலா லூன்றினார்
ஊர்தா னாவ துலகேழும்
உடையார்க் கொற்றி யூராரூர்
பேரா யிரவர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. ௭

வாடா முலையாள் தன்னோடு
மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று
குறுகி விசயன் தவமழித்து
நாடா வண்ணஞ் செருச்செய்து
வாவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. அ

வேழ முரிப்பர் மழுவாளர்
வேள்வி யழிப்பர் சிரமறுப்பர்
ஆழி யளிப்பர் அரிதனக்கன்
றூனந் துகப்ப ர றமுறைப்பர்
ஏழைத் தலைவர் கடவூரி
லிறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே. கூ

மாட மல்கு கடலூரில்
மறையோ ரேத்து மயானத்துப்
பீடை தீர வடியாருக்
கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூரன்
நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடும் அடியார் கேட்பார்மேற்
பாவ மான பறையுமே. க0

திருச்சிற்றம்பலம்.

பவளவா யன்ன மூர்த்தியை யெரித்தே
பகர்கட லூர்மயா னத்தில்
குவளைநேர் விழியாள் மலர்க்குழல் மின்னம்
பாளொடு குலவிவாழ் மணியே!
கவளமாக் களிற்றின் உரியணி பவனே!
கடவுளே! பிரம புரீசா!
திவவொளி மணியார் கழலெனக் களிப்பாய்
செல்வமே கருணைவா ரிதியே!